தினமணி

இரவில் 40 டன் கொப்பரை கொள்முதல் அதிர்ச்சியில் பொள்ளாச்சி விவசாயிகள்

First Published : 18 Apr 2010 09:40:31 AM IST
Last Updated : 18 Apr 2010 01:17:20 PM IST

பொள்ளாச்சி, ஏப். 17: பல நூற்றுக் கணக்கான விவசாயிகள் காத்திருக்க, இரவு நேரத்தில் ரகசியமாக விவசாயிகள் சிலரிடம் ஒரே நாள் இரவில் 40 டன் கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டது. இது விவசாயிகளிடம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

÷பொள்ளாச்சியில் உள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் அரசு கொப்பரைக் கொள்முதல் மையம் செயல்படுகிறது. கடந்த மார்ச் 15-ம் தேதிக்குப் பின் கொப்பரைக் கொள்முதல் செய்யப்படவில்லை.

÷மார்ச் 31-ம் தேதி வரை கொள்முதல் செய்வதற்கு அரசு உத்தரவு இருந்தும், இருப்பு வைக்க இடமில்லை என்ற காரணத்தால் அதிகாரிகள் கொள்முதல் செய்யவில்லை.

÷வெளி மார்க்கெட்டில் கொப்பரை விலை குறைவாக இருப்பதால் அரசு கொள்முதல் மையங்களுக்கு விவசாயிகள் கொப்பரையைக் கொண்டு வந்தனர். ஆனால் கொப்பரையைக் கொள்முதல் செய்வதற்கு அதிகாரிகள் மறுத்தனர். இதனால் பலமுறை அதிகாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் இடையில் பிரச்னை ஏற்பட்டது.

÷இந்நிலையில், கொப்பரைக் கொள்முதலை துவக்குவதாக திடீரென உயரதிகாரிகள் தகவல் கொடுத்தனர்; சுமார் 40 டன் கொப்பரை கடந்த வியாழக்கிழமை இரவு கொள்முதல் செய்யப்பட்டது.

இரவு நேரம் என்பதால் கலாசுத் தொழிலாளர்கள் கொப்பரை மூட்டைகளை இறக்கி வைக்க மறுத்துள்ளனர். இதற்காக அவர்களுக்குக் கூடுதல் கூலி கொடுத்து கொள்முதல் செய்ததாகத் தெரிகிறது.

அதிகாரிகள் இரவோடு இரவாக கொப்பரை கொள்முதல் செய்ததால், கொப்பரை இருப்பு வைத்து காத்திருந்த விவசாயிகள் கடும் அதிர்ச்சிக்கும் அதிருப்திக்கும் உள்ளாகியுள்ளனர். ஆளும்கட்சியினர் கைகாட்டிய சில விவசாயிகளிடம் மட்டும் இரவு கொள்முதல் நடந்துள்ளதாக, அவர்கள் குற்றம் சாட்டினர்.

விசார "இரவு நேரத்தில் ஆளும்கட்சியினர் குறிப்பிட்ட விவசாயிகளிடம் மட்டும் கொப்பரையைக் கொள்முதல் செய்தது தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும்' என்று, பொள்ளாச்சி எம்.எல்.ஏ. வி.ஜெயராமன் கோரிக்கை விடுத்துள்ளார். அவர் சனிக்கிழமை கூறியது:

÷பொள்ளாச்சி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் கடந்த மார்ச் 15-ம் தேதிக்கு மேல் கொப்பரைக் கொள்முதல் செய்யப்படவில்லை. இதனால் விவசாயிகள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகினர்.

இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை இரவு, ஆளும் கட்சியினர் கைகாட்டிய சில விவசாயிகளிடம் மட்டும் 40 டன் கொப்பரை ஒரே இரவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கொப்பரையை இரவு நேரத்தில் கொள்முதல் செய்தது தொடர்பாக அரசு விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும்.

பாரபட்சமில்லாமல் அனைத்து விவசாயிகள் கொண்டு வரும் கொப்பரையைக் கொள்முதல் செய்வதை அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும், என்றார்.

**வறட்சியால் குறைந்த மாம்பழ உற்பத்தி**

First Published : 19 Apr 2010 04:00:04 AM IST



சென்னை, ஏப்.18: பருவமழை பொய்த்ததன் காரணமாக இந்த ஆண்டு மாம்பழ விளைச்சல் பெருமளவு குறைந்துள்ளது. இதனால் சந்தையில் மாம்பழ விலை அதிகரித்துள்ளது.

÷தமிழகத்தில் சேலம், கிருஷ்ணகிரி, தர்மபுரி, ஈரோடு, நாமக்கல், திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களில் மாம்பழம் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், இந்த மாவட்டங்களில் கடந்த ஆண்டு மிகக் குறைவான அளவே பருவமழை பெய்தது.

÷மேலும் தொடர்ந்து நிலவும் கடும் வறட்சியின் காரணமாக இந்த மாவட்டங்களில் உள்ள மாமரங்களில் வழக்கத்தைவிட மிகக் குறைவாகவே பூக்கள் பூத்தன. அவ்வாறு பூத்த பூக்களிலும் பெரும்பகுதி உதிர்ந்துவிட்டன.

÷மீதமுள்ள பூக்கள் பிஞ்சாக மாறினாலும், வெப்பத்தின் கடுமை தாங்காமல் பெருமளவு பிஞ்சுகள் வெம்பி, உதிர்ந்து விட்டதாக அம்மாவட்ட மாம்பழ விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

÷இதன் காரணமாக இந்த ஆண்டு சந்தைகளில் மாம்பழ வரத்து வழக்கத்தைவிட மிகவும் குறைவாக உள்ளது.

÷இது குறித்து சேலம் மாவட்ட மாம்பழ வியாபாரிகள் சங்கத் தலைவர் ஏ. ஜெயபால் கூறியதாவது:

÷தமிழகத்தில் மாம்பழ சீசன் வழக்கமாக பிப்ரவரி மாதத்தில் தொடங்கும். ஆனால் இந்த ஆண்டு ஏப்ரலில்தான் தொடங்கியுள்ளது. சீசன் தாமதமாகத் தொடங்கியது மட்டுமின்றி, வரத்தும் மிகக் குறைவாகவே உள்ளது.

÷ஒவ்வொரு ஆண்டும் இந்த காலகட்டத்தில் சேலம் சந்தைக்கு தினமும் 100 டன் மாம்பழம் வரும். ஆனால், இந்த ஆண்டு 10 டன் மட்டுமே வருகிறது. இதனால் மாம்பழ விலை அதிகரித்துள்ளது என்றார் ஜெயபால்.

÷சென்னையைப் பொருத்தவரை தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களைத் தவிர, ஆந்திரத்தில் இருந்துதான் பெருமளவு மாம்பழம் வருகிறது. ஆனால், வறட்சியின் பாதிப்பு ஆந்திரத்திலும் மாம்பழ உற்பத்தியில் சரிவை ஏற்படுத்தியுள்ளது.

÷இதனால் சென்னை கோயம்பேடு சந்தைக்கு மிகக் குறைந்த அளவிலேயே மாம்பழம் வருகிறது.

÷இது குறித்து சென்னை பழக் கமிஷன் ஏஜெண்டுகள் சங்கத் தலைவர் எஸ். சீனிவாசன் கூறியதாவது:

÷சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருவள்ளூர், திருத்தணி, பாலக்காடு, விஜயவாடா, நெல்லூர் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து சென்னைக்கு மாம்பழங்கள் வருகின்றன. கடந்த ஆண்டு இதே நேரத்தில் தினமும் 200 டன் மாம்பழம்

வந்தது. ஆனால் இப்போது 50 முதல் 60 டன் வரை மட்டுமே வருகிறது. இன்னும் 15 நாட்களில் வரத்து அதிகமாகலாம். எனினும், வழக்கமான மாம்பழ வரத்து இந்த ஆண்டு இருக்காது. இதனால் மொத்த சந்தையிலும், சில்லரை விற்பனையிலும் மாம்பழ விலை அதிகரித்துள்ளது என்றார் சீனிவாசன்.

÷சென்னை, அண்ணா கனி அங்காடி வியாபாரிகள் பொதுநல சங்க செயலாளர் என்.பி. முருகன் கூறும்போது, "இப்போது பங்கனப்பள்ளி கிலோ ரூ.40, அல்போன்சா ரூ.90, இமாம்பசந்த் ரூ.100, செந்தூரா ரூ.40 என விற்பனை ஆகிறது. இது கடந்த ஆண்டு விலையைவிட 50 சதவீதம் அதிகம். வரத்து அதிகமானால் விலை குறையும். எனினும் எந்த அளவுக்கு வரத்து அதிகரிக்கும் என்பதை இப்போது கூற முடியாது" என்றார்.

÷வறட்சியால் மாம்பழ உற்பத்தியில் ஏற்பட்ட இந்த சரிவு, மாம்பழ பிரியர்களை வருத்தமடையச் செய்துள்ளது.

**நாளை விவசாயத் தொழிலாளர் நலவாரிய ஆய்வுக் கூட்டம்**

First Published : 19 Apr 2010 12:00:00 AM IST

காஞ்சிபுரம், ஏப். 18: தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நலவாரியம் சார்பில் நலத் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை (ஏப். 20) காஞ்சிபுரத்தில் நடைபெறுகிறது.

÷இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் சந்தோஷ் கே.மிஸ்ரா வெளியிட்ட அறிக்கை:

÷தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் (சமூக பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம்-2006-ன் கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்று வரும் நலதிட்டப் பணிகள் குறித்தும், அப் பணிகளின் முன்னேற்றம் குறித்தும் ஆய்வுக் கூட்டம் வரும் ஏப்ரல் 20-ம் தேதி நடைபெறுகிறது. ÷இக் கூட்டத்தில் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நலவாரியத் தலைவர் கே.பி.ராமலிங்கம் மற்றும் இணைத் தலைவர் கு.செல்லமுத்து ஆகியோர் பங்கேற்கின்றனர்.

÷இக் கூட்டத்தில் 2006-ன் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளன.

**யானைகளால் 14 ஏக்கர் பயிர்கள் சேதம்**

First Published : 19 Apr 2010 01:09:44 AM IST

ஒசூர், ஏப். 18: தேன்கனிக்கோட்டை வட்டம், சந்தனப்பள்ளி ஊராட்சி எஸ்.குருபட்டி கிராமத்தில் யானைகளால், 14 ஏக்கர் பயிர்கள் சேதம் அடைந்தன.

ஒசூர் வனக்கோட்டம் அஞ்செட்டி வனப் பகுதியில் இருந்து, இக்கிராமத்துக்கு சனிக்கிழமை இரவு 20 யானைகள் வந்துள்ளன. இங்குள்ள விவசாயி முனிராஜிக்கு சொந்தமான 10 ஏக்கர் மாந்தோட்டத்தை நாசம் செய்தன. தொடர்ந்து, கோவிந்தராஜியின் 2 ஏக்கர் தக்காளி, 2 ஏக்கர் வாழைத் தோட்டங்களையும் அவை நாசம் செய்யத் தொடங்கின. ஞாயிற்றுக்கிழமை மாலை வரை யானைகள் தோட்டத்தை நாசம் செய்தன.

பின்னர் வனத் துறையினர் பொதுமக்களின் உதவியுடன் அஞ்செட்டி காப்புக் காட்டுக்குள் யானைகளை விரட்டியடித்தனர்.

வனப் பகுதியில் இருந்து விவசாய நிலங்களில் யானைகள் சென்று சேதம் ஏற்படுத்தி வருவதை வனத்துறையினர் தடுத்து நிறுத்த வேண்டும் என விவசாயிகள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

ஆனால், யானைகளால் ஏற்படும் தேசம் தொடர்ந்து நடைபெற்று வருவதால் விவசாயிகள் பொருளாதார ரீதியில் பாதிப்படைந்து வருவதாக விவசாயிகள் சங்கப் பிரமுகர்கள் கூறினர்.

**ஆறுமுகனேரியில் விவசாய வடிகாலை சீரமைக்க கோரிக்கை**

First Published : 19 Apr 2010 12:33:18 AM IST

ஆறுமுகனேரி, ஏப். 18:   ஆறுமுகனேரி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் விவசாயத்திற்கு பயன்படும் வடிகாலை தூர் வாரி சீரமைக்க வேண்டுமென பாஜக கோரிக்கை விடுத்து உள்ளது.

இது தொடர்பாக திருச்செந்தூர் ஒன்றிய பாஜக செயலர் இ. தங்கப்பாண்டியன் தமிழக முதல்வருக்கு அனுப்பிய மனு:

ஆறுமுகனேரியில் உள்ள பொய்யாங்குளம், நல்லூர் கீழக்குளம், நத்தக்குளம் மற்றும் சீனிமாவடி குளம் ஆகிய குளங்களின் மூலம் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பரப்பில் விவசாயம் நடைபெறுகிறது.

நத்தக்குளம் மற்றும் சீனிமாவடி குளம் பாசன நிலங்களிலிருந்து பயன்பாட்டிற்கு பின் வடிக்கப்படும் நீர் மற்றும் மழை வெள்ள காலங்களில் வெளியேறும் நீர் மூலக்கரை சாலையை கடந்து பண்டாரங்குளம், குதிரைக்காரன் குளம் கரையோரமாக ஆறுமுகனேரி மேற்குப்புறம் அமைந்துள்ள ரயில்வே பாலத்தைக் கடந்து பெருமாள்புரம் வடபுறம் கடலோர காவல் சோதனைச் சாவடி அருகில் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள எட்டுக்கண் பாலம் வழியாக கடலுக்குச் சென்று கலக்கிறது.

இவ்வடிகால் பத்து ஆண்டுகளுக்கு மேலாக தூர்ந்து கிடக்கிறது. இதனால் வடிகாலில் நீர் வடிவதில்லை என்பதால் வடிகால் அருகேயுள்ள விவசாய நிலங்களில் விவசாயம் நடைபெறாமல் தரிசாக உள்ளது.

மேலும் நல்லூர் கீழக்குளம் பாசன நிலங்களின் வடிகால் நல்லூர்-ஆறுமுகனேரி சாலையோரம் அமைந்துள்ளது. இதில் தடுப்புச்சுவர் நெடுஞ்சாலைத் துறையினரால் கட்டப்பட்டு வருகிறது.

இது வடிகாலின் 50 சதவிகிதப் பகுதியை மறைத்து கட்டப்படுவதால் வடிகாலில் நீர் வடியாமல் நிலங்களுக்குள் நீர் புகுந்து சேதத்தை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது.

இதைத் தவிர்க்க நெடுஞ்சாலைத் துறையினர் சாலையின் அருகில் ஏற்கெனவே உள்ள அளவில் வடிகாலிற்கு இடம்விட்டு தடுப்புச் சுவர் கட்ட வேண்டும்.

மேலும் சாகுபுரத்திலுள்ள வடிகாலையும் சீரமைத்து அனைத்து வடிகால்களுக்கும் தடுப்புச் சுவர் அமைத்திட பொதுப் பணித் துறை மூலம் நடவடிக்கை எடுக்க அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

தினமலர்

**பொள்ளாச்சி பகுதியில் பரவலாக கோடை மழை : சித்திரை சாகுபடியில் விவசாயிகள் தீவிரம்**

ள்ளாச்சி : பொள்ளாச்சியில் ஒருவாரமாக பரவலாக மழை பெய்வதால் சீதோஷ்ண நிலையில் மாற்றம் ஏற்பட்டு விவசாய பணிகள் சூடுபிடித்துள்ளன.

பொள்ளாச்சியில் நவம்பருக்கு பின் மழை பெய்யாததால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வறட்சி நீடித்த நிலையில் ஒரு வாரமாக இடி, மின்னலுடன் மழைபெய்கிறது. சமவெளிப்பகுதியில் ஆங்காங்கே மழை பெய்தாலும், மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் மழை தீவிரமடையவில்லை. பாசன திட்டத்திலுள்ள அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிக்கவில்லை. சமவெளி பகுதியில் சித்திரை பட்டத்தில் சாகுபடி செய்யும் விவசாயிகள் நிலத்தை உழுது மானாவரி சாகுபடியை துவங்கியுள்ளனர். நிலக்கடலை, தட்டை, உளுந்து, சோளம் போன்றவற்றை விதைத்துள்ளனர். இந்நிலையில், நேற்று முன்தினம் இடி, மின்னலுடன் லேசான மழை பெய்தது.

நேற்று காலை 8.00 மணி வரை  பதிவான மழையளவு விபரம் (மி.மீ.,யில்): சோலையாறு - 46, பரம்பிக்குளம் - 23, ஆழியாறு - 1.6, திருமூர்த்தி - 1, மேல் நீராறு - 30, மேல் ஆழியாறு - 2, காடம்பாறை-2, வால்பாறை - 28, மணக்கடவு - 10, பொங்கலூர் - 5, நல்லாறு - 3, பொள்ளாச்சி - 1 மேலும், இடி,மின்னலுடன் பலத்த காற்றும் வீசியதால், பல ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த வாழை மற்றும் தென்னை மரங்கள் வேருடன் சாய்ந்தன. அணைகளின் நீர் மட்டம் கணிசமாக

உயர்ந்துள்ளது.
சோலையாறு அணை ( 160 அடி ) 24.50 அடி. பரம்பிக்குளம் அணை (72 ) 40.60 அடி, ஆழியாறு அணை ( 120 அடி) 100.50 அடி. திருமூர்த்தி அணை (60 அடி ) 42.78 அடி. அமராவதி அணை (90 அடி) 21.13 அடிக்கு நீர்மட்டம் உள்ளது. விவசாயிகள் கூறுகையில், "பொள்ளாச்சி பகுதியில் சித்திரை பட்டத்திற்கு நான்கு முறை மழை கிடைக்கும். கடந்தாண்டு வடகிழக்கு, தென்மேற்கு பருவ காலத்தில் மழை பெய்யாததால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர். இந்தாண்டு எதிர்பார்த்தபடி மழை பொழிவு துவங்கியுள்ளதால் விவசாய பணிகளில் விறுவிறுப்பாக ஈடுபட்டுள்ளனர். துவக்கத்திலேயே மழை சீசன் நல்லபடியாக உள்ளதால், பருவகாலத்தில் மழை தீவிரமடையும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது" என்றனர்.

**காலிங்கராயன் வாய்க்கால் பகுதியில் வாழை நடவு பணியில் விவசாயிகள்**

ஈரோடு: காலிங்கராயன் வாய்க்கால் சீரமைப்பு பணிகளுக்காக தண்ணீர் நிறுத்தப்பட்ட நிலையிலும், வைராபாளையம் பகுதியில் வாழை நடவு தீவிரமாக நடந்து வருகிறது. காலிங்கராயன் வாய்க்கால் 11.64 கோடி ரூபாய் செலவில், வலது கரையில் கான்கிரீட் சுவர் அமைப்பதுடன், பழுதான மதகுகள், பாலங்கள் சீரமைக்கும் பணி சென்ற 14ம் தேதி துவங்கியது. சீரமைப்பு பணிகளுக்காக வாய்க்காலில் சென்ற 7ம் தேதியுடன் பாசனத்துக்கு தண்ணீர் நிறுத்தப்பட்டது.

முதல்கட்டமாக காலிங்கராயன் பாளையத்திலிருந்து, 9.4கி.மீ., தூரத்தில் உள்ள பி.பி.அக்ரஹாரம் முதல் 13.6 கி.மீ., தூரமுள்ள சுண்ணாம்பு ஓடை வரை கான்கிரீட் சுவர் அமைக்கும் பணி நடக்கிறது. சீரமைப்பு பணிகளை ஜூன் 16ம் தேதிக்குள் முடித்து, பாசனத்துக்கு தண்ணீர் திறக்க அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

முன்னதாக நெல் பயிரிட்டு அறுவடை செய்த, விவசாயிகள் ஜூன் மாதம் மீண்டும் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும் என்பதால், இப்போதே வாழை நடவு செய்துள்ளனர். ஈரோடு வைராபாளையம், கருங்கல்பாளையம், வளையக்கார வீதி மற்றும் சுற்றுப்பகுதி யில் ஏராளமான விவசாயிகள் வாழை சாகுபடி செய்துள்ளனர். கருங்கல்பாளையத்தை சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது:

வாய்க்காலில் ஆகஸ்ட் மாதம் ஏற்கனவே சாகுபடி செய்த வாழை, மஞ்சள், கரும்பு பயிரிக்கு உயிர்நீர் திறக்கப்பட்டபோதே, நெல் நடவு பணிக்கான பணிகளை தொடங்கி, நெல் நடவு செய்து பிப்ரவரி இறுதியில், அறுவடையை முடித்து விட்டோம். அறுவடை யை முடித்த பின்னர், அடுத்து வாழை நடவு செய்வதற்காக நிலத்தை உழுது, சென்ற மாத துவக்கத்திலேயே வாழை கன்றுகளை நடவு செய்தோம்.

தற்போது, சீரமைப்பு பணிக்காக வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தப்பட்டாலும், ஜூன் மாதம் 16ம் தேதி பாசனத்துக்கு தண்ணீர் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதுக்குள் மரம் ஓரளவு வளர்ந்துவிடும். வாய்க்கால் திறந்ததும் காய்க்கும் பருவத்துக்கு தண்ணீர் கிடைக்கும் என்பதால், பராமரிப்பு பணி காலத்திலும் நிலத்தை தரிசாக போடாமல், வாழையை நடவு செய்துள்ளோம். பெரும்பாலான விவசாயிகள் கதளி, தேன் வாழை ரகங்களை அதிகளவு நடவு செய்துள்ளனர்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**பயிர் சாகுபடி கடன் வழங்கல்**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி நீர் வள நில வளத் திட்டத்தின் கீழ் விவசாய ஆர்வலர் குழுக்களுக்கு கடன் வழங்கபட்டது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நீர் வள நிலவளத் திட்டத்தின் கீழ் வேளாண் துறை, வேளாண் பொறியியல் துறை, கால்நடை பராமரிப்பு துறை ஆகியவற்றின் கீழ் விவசாய மேம்பாட்டு பணிகள் நடந்து வருகிறது. இத்திட்ட பணிகளை கலெக்டர் சண்முகம் பார்வையிட்டார். கீழ் கிருஷ்ணகிரி யூனியன் திப்பனப்பள்ளி பஞ்சாயத்தில் கும்மனூர் மற்றும்

மூங்கில் புதூர், பூவத்தி உள்ளிட்ட கிராமத்தில் நீர் வள நில வள திட்டத்தின் கீழ் செம்மை நெல் சாகுபடி மற்றும் மண்புழு உரம் தயாரிப்பு பணிகளை பார்வையிட்டார்.
சொட்டு நீர் பாசனத்தை பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய நன்மைகள் குறித்து வேளாண் துறையினர் விளக்கினர். ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மோரமடுகு கிராமத்தில் ஒரு லட்ச ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள தடுப்பணை மற்றும் வெலகலஅள்ளி கிராமத்தில் கால்நடை தீவன புல் வளர்ப்பு செய்வதையும் கலெக்டர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். கும்மனூர் கிராமத்தில் யூனியன் வங்கி சார்பில் நீர்வள நில வளத்திட்டத்தின் கீழ் விவசாய ஆர்வலர்கள் குழுக்களுக்கு தலா ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் 5 குழுக்களுக்கு பயிர் சாகுபடி கடனையும், ஐந்து டான்வாபீ பண்ணை மகளிர் குழுக்களுக்கு பயிர் நடும் இயந்திரம் மற்றும் களையெடுக்கும் இயந்திரம், மூங்கில் புதூரில் 5 டான்வாபீ பண்ணை மகளிர் குழுக்களுக்கு பயிர் நடவு அளவீட்டு கருவி ஆகியவற்றை கலெக்டர் சண்முகம் வழங்கினார்.
ஆய்வின் போது, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) நாச்சியப்பன், கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் டாக்டர் தயாநிதி, துணை இயக்குனர் டாக்டர் அருள்மொழி தேவன், உதவி இயக்குனர் (பஞ்., பயிற்சி) ரமேஷ்குமார், வேளாண் பொறியில் துறை உதவி செயற்பொறியாளர் நடராஜன், வேளாண் அலுவலர் பச்சையப்பன், வேளாண் உதவி இயக்குனர் ரவி ஆகியோர் உடன் இருந்தனர்.

### 1.20 லட்சம் டன் ராகி உற்பத்தி கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் சாதனை

ஓசூர்: நடப்பாண்டில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் டன் ராகி உற்பத்தி செய்து கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் சாதனை படைத்துள்ளனர். தமிழகத்தில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 60ஆயிரம் ஹெக்டேரில் ராகி சாகுபடி செய்யப்படுகிறது. ஓசூர் தாலுகாவில் 18 ஆயிரம் ஹெக்டேரிலும், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் 26ஆயிரம் ஹெக்டேரிலும் ராகி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. உற்பத்தி செய்யப்படும் ராகி, தமிழகத்தில் பிற மாவட்டங்களுக்கும், வட மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது.

தமிழக அரசும், விதை பண்ணைக்காக நேரடியாக விவசாயிகளிடம் கொள்முதல் செய்கிறது. ஓசூர் அடுத்த மாசிநாயக்கன்ப்பள்ளி, டி.பரந்தூர், தட்டிகானப்பள்ளி, முத்தாலி, பாகலூர், பெலத்தூர், தேன்கனிக்கோட்டை, தளி, கெலமங்கலம் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் ராகி பிரதான பயிராக சாகுபடி செய்யப்படுகிறது. ராகி பயிர் அதிக வறட்சியை தாங்க கூடியது, குறைந்த பராமரிப்பு செலவு, நிலையான வருமானம் என்பதால் விவசாயிகள் ராகியை விரும்பி சாகுபடி செய்கின்றனர். வேளாண்மை துறையும், 50 சதவீதம் மானிய விலையில் விதைகள் வழங்கி, ராகி சாகுபடியில் விவசாயிகளை ஊக்குவிக்கிறது. கடந்த 2009ல் மொத்தம் 55ஆயிரம் ஹெக்டேரில் ராகி சாகுபடி செய்யப்பட்டது. ஒரு ஹெக்டேருக்கு 1,950 கிலோ என்ற வீதம் மொத்தம் 82 ஆயிரத்து 500 டன் மகசூல் கிடைத்தது. தற்போது, ஒரு ஹெக்டேருக்கு 2 டன் வீதம் மகசூல் கிடைத்துள்ளது. மொத்தம் ஒரு லட்சத்து 20 ஆயிரம் டன் உற்பத்தி செய்து விவசாயிகள் எப்போதும் இல்லாத வகையில் சாதனை படைத்துள்ளனர்.
இது குறித்து ஓசூர் வேளாண்மை துறை உதவி இயக்குனர் நாகராஜ் கூறியதாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தை பொறுத்தவரையில், ராகி சாகுபடி செய்வதற்கு ஏற்ற நல்ல மண் வளம், கால்நடைகள் கழிவுகள் நிறைந்து காணப்படுகிறது. கடந்த காலத்தில் வீரியம் குறைந்த ரக விதைகளை விவசாயிகள் சாகுபடி செய்தனர். எதிர்பார்த்த மகசூல் கிடைக்கவில்லை.கடந்த ஆண்டு வேளாண் துறை 'ஜிபிவி 28' என்ற புதிய ரக விதையை அறிமுகப்படுத்தியது. 'ஜிபிவி 28' ரக விதைகள், அதிக வறட்சியை தாங்க கூடியது, அதிக மகசூலை கொடுக்க கூடியது. ராகி பயிர்களை தாக்கும் குலைதாக்குதல் நோய் வராமல் தடுக்கும், அதிக நோய் எதிர்ப்பு சக்தியை கொண்டது. 120 நாளில் குறுகிய காலத்தில் அறுவடை செய்யலாம். அதனால், நடப்பாண்டு ராகி உற்பத்தியில் ஹெக்டேருக்கு 2 டன் வீதம் மகசூல் கிடைத்தது. அடுத்த ஆண்டு மேலும் மகசூலை அதிகரிக்க வரும் ஜூனில் அடுத்த போக சாகுபடிக்கு 'எல் 5' என்ற புதிய ரக ராகி விதை றிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஓசூர் வேளாண் அலுவலகத்தில் 13 ஆயிரம் கிலோ 'எல்5' விதை, தேன்கனிக்கோட்டையில் 20ஆயிரம் கிலோ விதை விற்பனைக்கு தயாராக உள்ளது. ஒரு கிலோ விதை17 ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வேளாண்மை துறை 50 சதவீதம் மானியத்தில், விவசாயிகளுக்கு விதை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.
ராகி சாகுபடியில் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட வாய்ப்பில்லை. விவசாயிகளுக்கு குறைந்த முதலீட்டில் நிலையான வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது. தற்போது ஒரு கிலோ ராகி 10 ரூபாய்க்கும், 11 ரூபாய்க்கும் விவசாயிகள் விற்பனை செய்து நல்ல லாபம் சம்பாதித்துள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

**போர்வெல் போட விவசாயிகள்... ஆர்வம்! கிராம நீர் ஊற்று நிபுணர்களுக்கு கிராக்கி**

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டி பகுதியில் வேப்ப மர குச்சியில் பல நூறு அடி ஆழத்தில் செல்லும் நீர் ஊற்றை கண்டறிந்து, போர்வெல் போடும் முயற்சியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். தொடர் வறட்சி எதிரொலியாக கிராம நீர் ஊற்று நிபுணர்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி பகுதியில் போதிய மழை இல்லாததால், கடும் வறட்சி நிலவி வருகிறது. கிணறுகள், ஏரி, குளம் வறண்டு போனதால், குடிநீருக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தென்னை, கொய்யா, மா, வாழை உள்ளிட்ட விவசாய பயிர்கள் உயிர் பிழைக்க தண்ணீர் இன்றி மடிந்து வருகின்றன. விவசாயிகளுக்கும் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதால், கலக்கம் அடைந்துள்ளனர். கண் எதிரில் செத்து மடியும் பயிர்களை காப்பாற்ற தண்ணீர் தேடி புதிய போர்வெல் போடும் பணியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். பனமரத்துப்பட்டி, வாழப்பாடி, மல்லூர், கோம்பைக்காடு, வைத்தியகவுண்டர் புதூர் உள்ளிட்ட பகுதியில் பல ஆண்டுகளாக நிலத்தடி நீர் ஊற்று கண்டறியும் தொழிலை சிலர் செய்து வருகின்றனர். அவர்களை அழைத்து வந்து, தங்கள் வயல் பகுதியில் நீர் ஊற்று உள்ளதா என்று கண்டறியும் முயற்சியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

பல நூறு அடி ஆழத்தில் ஓடும் நிலத்தடி நீர் ஊற்றை கண்டறிய வேப்ப மர குச்சி, இரும்பு துண்டு, தேங்காய் மூலம் நீர் ஊற்றை தேடி வரும் வினோதம் நடந்து வருகிறது. வேப்ப மரத்தின் இரு கிளை கொண்ட குச்சியை இரண்டு கைகளில் பிடித்து, வயல் பகுதியில் நடக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்தவுடன் கையில் இருக்கும் குச்சி வேகமாக சுழல்கிறது. அந்த இடத்தில் நீர் ஊற்று செல்வதாக கூறி போர்வெல் போட பாய்ன்ட் குறிக்கின்றனர்.

அதேபோல் கயிற்று நுனியில் இரும்பு துண்டு அல்லது காந்தக்கல் கட்டி, அதை வயல் பகுதி முழுவதும் தூக்கி செல்கின்றனர். குறிப்பிட்ட இடத்தில் கயிற்றில் இருக்கும் இரும்பு வேகமாக சுழல்கிறது. சில இடத்தில் குறுக்கும், நெடுக்கமாக சென்று வருகிறது. அந்த இடத்தில் நீர் ஊற்று செல்வதாக நீர் ஊற்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். நீர் ஊற்று நிபுணர்கள் போர்வெல் போடும் இடம் குறித்தும், தண்ணீர் கிடைக்கும் ஆழம் குறித்தும் செல்கின்றனர். அவர்கள் கூறும் இடத்தை நம்பி விவசாயிகள் போர்வெல் போட்டு வருகின்றனர். பெரும்பான்மையான இடங்களில் கிராம நீர் ஊற்று நிபுணர்கள் குறித்த இடத்தில் போர்வெல் போட்டு தண்ணீர் கிடைத்துள்ளன. ஒரு சில இடத்தில் 1,000 அடிக்கு மேல் போர்வெல் போட்டும் வெறும் புகை மட்டுமே மிஞ்சி உள்ளது. எனினும், கிராம நீர் ஊற்று கண்டறியும் நிபுணர்களை விவசாயிகள் தொடர்ந்து தேடி வந்து கார், பைக் உள்ளிட்ட வாகனங்களில் அழைத்து செல்கின்றனர். அதனால், கிராம நீர் ஊற்று கண்டறியும் நிபுணர்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. பனமரத்துப்பட்டியை சேர்ந்த நீர் ஊற்று நிபுணர் கனகராஜன் கூறியதாவது:
நான் 30 ஆண்டுக்கு மேலாக நிலத்தடி நீர் ஊற்று கண்டு பிடிக்கும் தொழில் செய்து வருகிறேன். பால் இருக்கும் வேப்ப மர குச்சி மூலம் எளிதாக எத்தனை அடி ஆழத்தில் நீர் ஊற்று உள்ளது என அறிய முடியும். வேப்ப மர குச்சி சுழலும் வேகத்தை பொருத்து ஒரு நீர் தடம் அல்லது இரு நீர் தடம் உள்ளதா எனவும் தெரிந்து கொள்ளலாம்.
பனமரத்துப்பட்டி அடிக்கரை, காளியாகோவில் புதூர் ஆகிய பகுதியில் 300 அடி முதல் 500 அடிக்குள் தண்ணீர்

கிடைக்கும். மல்லூர், நல்லியாம்புதூர், பள்ளித்தெருப்பட்டி, குரால்நத்தம், தும்பல்பட்டி உள்ளிட்ட இடங்களில் 800 அடிக்கும் கீழ் நீர் மட்டம் உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

* ஆத்தூர் சுற்றுவட்டாரத்திலுள்ள பாசன கிணறுகள் வறண்டதால் ஆழ்துளை கிணறுகள் அமைக்க நீருற்று நிபுணர்களை விவசாயிகள் நாடி வருகின்றனர்.

ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, பெத்தநாயக்கன்பாளையம் பகுதிகளில் விவசாயம், கால் நடை வளர்ப்பு தொழில் பிரதானமாக உள்ளது. கடந்தாண்டு பருவ மழையில்லாததால் நீர் நிலைகள் பெரும்பாலும் காய்ந்தன. கிணறுகளில் ஊற்று நீர் இல்லாததால் பயிர் செய்ய முடியாத சூழலுக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர்.

அதனால் ஆழ்துளை கிணறு அமைத்து விவசாயம் செய்ய விவசாயிகள் விரும்புகின்றனர். இதற்காக நீருற்று நிபுணர்களை அழைத்து வந்து நீருற்று குறித்து இரும்பு கம்பி, குச்சி, தேங்காய் போன்றவைகள் மூலம் ஆய்வு செய்கின்றனர். நீருற்றை அடையாளம் செய்து கொண்டு ஆழ்துளை கிணறு அமைக்கும் பணிகளில் விவசாயிகள் ஈடுபடுகின்றனர். இதுகுறித்து ஆத்தூர் அம்மம்பாளையம் நீருற்று நிபுணர் துரைசாமி கூறுகையில், 'ஆத்தூர் பகுதியில் 100 டி ஆழமுள்ள கிணற்றில் கூட தண்ணீர் கிடைப்பதில்லை. தற்போது 800, 900 அடிக்கு கீழ் ஆழ்துளை கிணறு அமைத்தால் சிறிதளவு தண்ணீர் கிடைக்கிறது. நீர்நிலை வழித்தடம் மாறுவதால் ஆழ்துளை கிணறுகளும் வறட்சிக்குள்ளாகிவிடுகிறது. இரும்பு கம்பி, குச்சி, தேங்காய் போன்றவற்றின் மூலம் நீருற்று ஆய்வு செய்திடும்போது நீருற்று உள்ள இடத்தில் அவை வேகமாக சுற்றும். அவ்விடம் அடையாளம் செய்யப்பட்டு ஆழ்துளை கிணறு அமைக்கப்படுகிறது. ஆத்தூர் பகுதியில் நீர் தேவை அதிகரித்து வருவதால் கட்டுப்பாடில்லாமல் ஆழ்துளை கிணறு அமைக்கின்றனர். இதேநிலை நீடித்தால் தண்ணீர் இல்லாத மாவட்டமாக விரைவில் மாறிவிடும்'என்றார்.

### 7,337 குவிண்டால் பருத்தி ரூ.2.74 கோடிக்கு விற்பனை

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்தில் 2.74 கோடி ரூபாய்க்கு விற்று சாதனை படைத்துள்ளது. ஆத்தூர் புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ஞாயிற்றுக்கிழமையில் பருத்தி ஏலம் நடந்து வருகிறது.

கச்சிராபாளையம், உளுந்தூர்பேட்டை, பண்ருட்டி, திட்டக்குடி, பெரம்பலூர், அரியலூர், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, ஈரோடு, புளியம்பட்டி, ராஜபாளையம், திருச்சி புளிவலம், பாடாலூர், துறையூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் ஆத்தூர் அதன் சுற்றுவட்டார பகுதியில் விளைவிக்கப்படும் பருத்தியை விவசாயிகள் ஏலத்துக்கு கொண்டு வந்தனர். நேற்று நடந்த ஏலத்துக்கு ஆர்.சி.ஹெச்., ரக பருத்தி 15ஆயிரத்து 630 மூட்டைகள், டி.சி.ஹெச்., 4,800 மூட்டைகள், கொட்டு பருத்தி 532 மூட்டை என 20 ஆயிரத்து 962 மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. டி.சி.ஹெச்., ரக பருத்தி ஒரு குவிண்டால் அதிக பட்சமாக 5,019 ரூபாயும், குறைந்த பட்சமாக 4,659 ரூபாய்க்கு ஏலம் போனது. ஆர்.சி.ஹெச்., ரக பருத்தி குவிண்டால் அதிகபட்சமாக 3,601 ரூபாய், குறைந்த பட்சமாக 3,241 ரூபாய்க்கு ஏலம் போனது. கொட்டு பருத்தி ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 2,529 ரூபாயும், குறைந்த பட்சமாக 1,855 ரூபாய்க்கு ஏலம் போனது. ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கடந்தாண்டு நவம்பர் துவங்கி தொடர்ந்து நடந்து வரும் பருத்தி ஏலத்தில் 20 ஆயிரத்து 962 பருத்தி மூட்டைகள் கொண்ட 7,337 குவிண்டால் பருத்தி இரண்டு கோடியே 74 லட்சம் ரூபாய்க்கு விற்று சாதனை படைத்துள்ளது.

### 450 குவிண்டால் மஞ்சள்: ரூ.85 லட்சத்துக்கு ஏலம்

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 450 குவிண்டால் மஞ்சள் 85 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. ஆத்தூர் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் மஞ்சள் அறுவடை பணிகள் நடந்து வருகின்றன. கச்சிராபாளையம், பெரம்பலூர், அரியலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை உள்ளிட்ட பகுதிகளிலும் அறுவடை பணிகள் நடக்கின்றன. மஞ்சள் சுத்தம் செய்து ஈரோடு, நாமக்கல் நாமகிரிபேட்டை, ஒழுங்குமுறை விற்பனை கூடம், ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், தனியார் மண்டிகளில் நடக்கும் மறைமுக டெண்டர் ஏலத்தில் விவசாயிகள் விற்பனை செய்து வருகின்றனர்.

கடந்த மார்ச் 6ம் தேதி ஒரு குவிண்டால் மஞ்சள் 10 ஆயிரத்து 789 ரூபாய்க்கு விற்கப்பட்டது. 13ம் தேதி ஒரு குவிண்டால்12 ஆயிரத்து 899 ரூபாய், 20ம் தேதி விரலி மஞ்சள் ஒரு குவிண்டால் 14 ஆயிரத்து 669 ரூபாய், 27ம் தேதி விரலி மஞ்சள் ஒரு குவிண்டால் 13 ஆயிரத்து 320 ரூபாய் என்று விற்பனையானது.
கடந்த 3ம் தேதி நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி மஞ்சள் குவிண்டால் 13 ஆயிரத்து 529 ரூபாய்க்கு விற்றது. கடந்த 10ம் தேதி நடந்த ஏலத்தில் விரலி மஞ்சள் குவிண்டால் 13 ஆயிரத்து 677 ரூபாய்க்கு விற்பனையானது.
நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி மஞ்சள் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 13 ஆயிரத்து 860 ரூபாய், குறைந்த பட்சமாக 12 ஆயிரத்து 719 ரூபாய், உருண்டை மஞ்சள் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 13 ஆயிரத்து 359 ரூபாய், குறைந்த பட்சமாக ஒரு குவிண்டால் 12 ஆயிரத்து 119 ரூபாய், பனங்காலி மஞ்சள் ஒரு குவிண்டால் 11 ஆயிரத்து 919 ரூபாய், குறைந்த பட்சமாக ஒரு குவிண்டால் 10 ஆயிரத்து 690 ரூபாய்க்கு ஏலம் போனது. 1,200 மூட்டை கொண்ட 450 குவிண்டால் மஞ்சள் 85 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

**பி.ஏ.பி., முதல் மண்டல பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு : விவசாயிகள் மகிழ்ச்சி**

உடுமலை : பி.ஏ.பி., முதல் மண்டல பாசனம், நான்காம் சுற்றுக்கு நேற்று காலை திருமூர்த்தி அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது.
பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்டத்தில் முதல் மண்டலத்திற்கு ஜன., 22ல் தண்ணீர் திறக்கப்பட்டது. கோவை, திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட 94,446 ஏக்கர் நிலங்கள் இதன் மூலம் பயன்பெற்றன. மண்டல பாசன காலமான 135 நாளில்; 90 நாட்கள், ஐந்து சுற்றுக்களில் 9012 மில்லியன் கன அடி தண்ணீர் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. முதல் மற்றும் இரண்டாம் சுற்றுக்கு குறிப் பிட்ட அளவு தண்ணீர் வழங்கப்பட்ட நிலையில், திட்டத்தின் ஆதாரமான காண்டூர் கால்வாயில், பிப்.,19 ல் திடீர் உடைப்பு ஏற்பட்டு, திருமூர்த்தி அணைக்கு ஒன்பது நாள் நீர் வரத்தில்லை. அணை நீர் மட்டம் சரிந்ததால், மூன்றாம் சுற்று நாட்கள் குறைக்கப்பட்டது. நான்காம் சுற்றுக்கு தண்ணீர் திறந்து விட வேண்டிய நிலையில், நீர் இருப்பு திருப்தியாக இல்லாததால் தண்ணீர் திறக்கப்படவில்லை. கடும் வறட்சி நிலவும் நிலையில், தண்ணீர் வழங்குவதில் தடை ஏற்பட்டதால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்தனர்.
பல ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த பயிர்கள் தண்ணீர் இல்லாமல் பாதித்தது. திருமூர்த்தி அணையின் நீர் மட்டத்தை உயர்த்தி, தண்ணீர் திறக்கும் வகையில், பி.ஏ.பி., திட்ட தொகுப்பு அணைகளிலிருந்து காண்டூர் கால்வாய் வழியாக தண்ணீர் கொண்டு வரப்பட்டு, திருமூர்த்தி அணையில் சேகரிக்கப் பட்டது. அணை நீர் மட்டம் உயர்ந்ததையடுத்து, முதல் மண்டலம், நான்காம் சுற்றுக்கு 12 நாள் தாமதமாக , நேற்று காலை 8.00 மணி முதல் பிரதான கால்வாயில் தண்ணீர் திறக்கப் பட்டது.
நேற்று காலை நிலவரப்படி, அணை நீர் மட்டம் மொத்தமுள்ள 60 அடியில், 42.78 அடியாகவும், 1246.11 மில்லியன் கன அடி நீர் இருப்பும் இருந்தது. அணைக்கு காண்டூர் கால்வாய் வழியாக வினாடிக்கு 694 கன அடி நீர் வரத்து இருந்தது. அணையிலிருந்து, பிரதான கால்வாய், குடிநீருக்கு 1116 கன அடி நீர் வெளியேற்றப்பட்டது. நான்காம் சுற்றுக்கு, தொடர்ந்து 17 நாட்கள் வினாடிக்கு 926 கன அடி நீரும், ஆறு நாட்கள் வெள்ளகோவில் உட்பட கடை மடை பகுதிக்கு

வினாடிக்கு 235 கன அடி நீரும் வழங்கப்படும். தொடர்ந்து இறுதி சுற்றுக்கு தாமதமில்லாமல் தண்ணீர் வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

தினத்தந்தி

## திருமூர்த்தி அணையில் இருந்து பி.ஏ.பி. முதல் மண்டல பாசனத்துக்கு 4–வது சுற்று தண்ணீர் திறக்கப்பட்டது

உடுமலை, ஏப்.19–

திருமூர்த்தி அணையில் இருந்து பி.ஏ.பி. முதல் மண்டல பாசனத்துக்கு 4–வது சுற்று தண்ணீர் நேற்று திறந்து விடப்பட்டது.

பரம்பிக்குளம்–ஆழியாறு பாசன திட்டம்

உடுமலையை அடுத்துள்ள திருமூர்த்தி அணையின் மூலம் பரம்பிக்குளம்–ஆழியாறு பாசன திட்டத்தின் கீழ் (பி.ஏ.பி), கோவை, திருப்பூர் மாவட்டத்தில் 3 லட்சத்து 77 ஆயிரத்து 152 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. இந்த பாசன பகுதிகள் 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு ஒரு மண்டலத்துக்கு 135 நாட்களில் உரிய இடைவெளி விட்டு 90 நாட்களுக்கு தண்ணீர் என்ற கணக்கில் தண்ணீர் விடப்பட்டு வருகிறது.

இதில் கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள பி.ஏ.பி. முதல் மண்டல பாசன பகுதிகளுக்கு திருமூர்த்தி அணையில் இருந்து கடந்த ஜனவரி மாதம் 22–ந் தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது. முதல் மண்டல பாசனத்துக்கு 6 நாட்கள் இடைவெளி விட்டு 5 சுற்றுக்களாக ஒரு சுற்றுக்கு 17 நாட்கள் வீதம் தண்ணீர் விடுவது என்று கணக்கிடப்பட்டு கடந்த 6–ந் தேதியுடன் 3 சுற்றுகள் நிறைவடைந்தது.

தண்ணீர் திறப்பு

திருமூர்த்தி அணையில் இருந்து 4–வது சுற்றுக்கான தண்ணீர் நேற்று காலை 8 மணிக்கு திறந்து விடப்பட்டது. பரம்பிக்குளம் பிரதான கால்வாயில் வினாடிக்கு 926 கன அடி வீதமும், உடுமலை கால்வாயில் வினாடிக்கு 163 கன அடி வீதமும் தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது. இந்த தண்ணீர் தொடர்ந்து 17 நாட்களுக்கு விடப்படும்.

முதல் மண்டல பாசனத்துக்கு 4–வது சுற்றுக்கு விடப்பட்டுள்ள தண்ணீர் கடைமடை விவசாய பகுதிகளுக்கும் சென்றடையும் வகையில் தண்ணீரின் அளவு கணக்கிடப்பட்டு அதன் அடிப்படையில் 17 நாட்கள் முடிந்த பிறகு 6 நாட்களுக்கு வினாடிக்கு 235 கன அடி வீதம் தண்ணீர் விடப்படும். அத்துடன் 4–வது சுற்றுக்கான தண்ணீர் நிறைவு பெறும்.

94 ஆயிரத்து 446 ஏக்கர்...

4–வது சுற்றுக்கான தண்ணீர் விடப்பட்டுள்ளதால் மூலம் பி.ஏ.பி. முதல் மண்டல பாசனத்தில் கோவை மாவட்டத்தில் 16,600 ஏக்கர் நிலமும், திருப்பூர் மாவட்டத்தில் 77, 846 ஏக்கர் நிலமும் ஆக மொத்தம் 94 ஆயிரத்து 446 ஏக்கர் பாசன வசதி பெறும். திருமூர்த்தி அணையின் மொத்த உயரம் 60 அடி. மொத்த தண்ணீர் கொள்ளளவு

*ஆயிரத்து 935 மில்லியன் கன அடி. அணையில் நேற்று காலை நீர் மட்டம் 42.78 அடியாக இருந்தது. அணையில் ஆயிரத்து 246.11 மில்லியன் கன அடி தண்ணீர் இருந்தது. அணைக்கு வினாடிக்கு காண்டூர் கால்வாய் மூலம் 694 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து பாசனத்துக்கு 1,089 கன அடி வீதமும், குடிநீருக்காக 16 கன அடி வீதமும் தண்ணீர் திறந்து விடப்பட்டிருந்தது. தண்ணீர் இழப்பு வினாடிக்கு 11 கன அடியாகும்.*

# கொன்றை மலர்கள்



கோடை வெயிலின் தாக்கத்தால் காடுகளும், நீர் நிலைகளும் வறண்டு காணப்படுகின்றன. ஆனால் இந்த வெயிலிலும் கண்களுக்கு விருந்தாய் பூத்து குலுங்கும் கொன்றை மலர்களை படத்தில் காணலாம். இடம்:– கூடலூர் சுங்கம்